# DEPOSITION OF WITNESS

| | | |
|---|---|---|
| THE COURT OF | : | II ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THANJAVUR. |
| Case No | : | SC 73/2020 |
| Prosecution Witness | : | PW 14 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சாமிய்யா | Caste | : | |
| Father Name | : | குழந்தைவேலு | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | சுமார் 70 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 09.01.2024.**

***எதிரிகள் 1, 4, 6, 7, 9, 10, 11 வருகை***

***எதிரிகள் 2, 3, 5, 8 வருகை இல்லை குவிமுச பிரிவு 317 கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.***

**அரசு தரப்பில் முதல் விசாரணை :-**

நான் உமையவள் ஆர்க்காடு, ஆதிமாரியம்மன் கோவில் தெருவில் வசிக்கிறேன். நான் முன்பு விவசாய கூலி வேலை பார்த்தேன். ஆஜர் எதிரிகள் என் வீட்டிற்கு கிழக்கே 5, 6 வீடுகள் தள்ளி இருக்கிறார்கள். வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிஸார் என்னை விசாரித்தார்கள் நான் அவர்களிடம் ஒன்றும் தெரியாது என்று சொன்னேன்.

**அரசுதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

12.06.2019 அன்று அதிகாலை 3 மணியளவில் நான் சத்தம் கேட்டு எதிரி குமாரி வீட்டின் முன்பு பார்த்தபோதுTN 82C 4821 என்ற டாட்டா இண்டிகா கார் நின்று கொண்டிருந்தது. அதில் எதிரிகள் இருந்தனர், எதிரி முருகராஜின் மகள் சந்தியாவும் இறந்துபோன பிரசாந் என்பவரும் இருந்தனர் என்றும், அப்போது எதிரி முருகராஜ் சந்தியாவின் தாலி கயிறை கழட்டும்படி மிரட்டியதால் அவர் கழட்டி எறிந்தார் என்றும், அப்போது எதிரிகள் குமார் மற்றும் பார்த்திபன் எண்டா சந்தியாவை அடிக்கிற பிரசாந்தை காரை விட்டு கீழே இரக்குங்கடா என்றும், பின்பு எதிரிகள் அவரை காரில் ஏற்றி கொண்டு உடன் முருகராஜ், சுரேந்திரன், தினேஷ், வெங்கடேசன், தமிழ்செல்வன் ஆகியோர்கள் ஏறி கொண்டு பாரதி காரை ஒட்டி கொண்டு பனவெளிவெட்டாறு பக்கம் சென்றுவிட்டார்கள் என்றும், பின்பு சந்தியாவை TN 49 AH 3316 என் ற காரில் ஏற்றி கொண்டு அவருடன் சரவணன், கந்தத்துரை, பன்னீர்செல்வம் ஆகியோர்கள்

சென்றார்கள் என்றும், பின்னிட்டு 12.06.2019 காலை 9 மணியளவில் பனவெளி வெட்டாற்றில் பிரசாந் வாயில் துணிகட்டி தலையில் அடித்து கொலை செய்து கிடப்பதாக கேள்விபட்டேன் என்றும், சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

பிரசாந் இறந்தது கேள்விபட்டேன் எனக்கு சரியாக கண் தெரியாது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- A. மலர்விழி)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.